பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 58

வியாழக்கிழமை
23 ஜனவரி 2025

தை 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

இலங்கையில் நீதியை பிரிட்டன் உறுதிப்படுத்தும் » 11

கணக்கறிக்கை வழங்காத

## 35 வேட்பாளர்கள் விசாரணைக்குள்!

யாழ்ப்பாணம், ஜன. 23
நாடாளுமன்றத் தேர்தலின்போது, யாழ்ப்பாணம் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இருந்து போட்டியிட்டு, தேர்தல் கணக்கறிக்கை வழங்காத வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
தேல்தல்கள் ஆணைக் குழுவால் யாழ்ப் ☞ 11

# பயங்கரவாதச் சட்டத்தை நீக்கத் துரித நடவடிக்கை

பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்
நீதி அமைச்சர் ஹர்ஷண தெரிவிப்பு



கொழும்பு, ஜனவரி 23
பயங்கரவாதத் தடைச்சட்டம் வெகுவிரைவில் நீக்கப்படும். அதற்குரிய ஏற்பாடுகள் துரிதமாக இடம்பெற்றுவருகின்றன என்று நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார். ☞ 11

தேர்தல் கணக்கறிக்கை தொடர்பில்

## அர்ச்சுனா, சசிகலா உள்ளிட்ட 9 தரப்புமீது பொலிஸ் விசாரணை

முதற்கட்ட நடவடிக்கைகளும் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23
நாடாளுமன்றத் தேர்தலின்போது, யாழ்ப்பாணம் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட ஒன்பது தரப்புக்களின் கணக்கறிக்கை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
தேர்தல் கணக்கறிக்கை தொடர்பில் வழங்கப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, தேர்தல் ஆணைக்குழு வழங்கிய முறைப்பாடுகளுக்கு ☞ 11

## நாகர்கோவில் பகுதியில் வீடொன்று தீக்கிரை!

யாழ்., ஜன. 23
வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மேற்குப் பகுதியில் நேற்று அதிகாலைவீடொன்று பகுதியளவில் தீக்கிரையாகியுள்ளது.
அதிகாலை 3.30 மணியளவில் வீடு தீப்பற்றி எரிவதை ☞ 11

## அரசியற்கைதிகளை உடன்விடுவிக்குக!

மனோகணேசன் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, ஜனவரி 23
பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும். அத்துடன் அரசியற்கைதிகள் விடுவிக்கப்படவேண்டும். இவை அனைத்தும் நிறைவேற்றப்படுவதுதான் உண்மையான 'தூய இலங்கை' என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். ☞ 11

## கனமழையால் 20 குடும்பங்கள் பாதிப்பு!

வவுனியா, ஜன. 23
வவுனியாவில் கடந்த சில நாள்களாக பெய்துவரும் கனமழை காரணமாக 20 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு ☞ 11

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னரே

## புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணிகள்

ஜனாதிபதி அநுர உறுதி

கொழும்பு, ஜன. 23
உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்த பின்னரே புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ☞ 11

அத்துமீறிய மீன்பிடி

## 8 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை!

» 11




'ஆர் குத்தினாலும் தீர்வு தாற அரசியலமைப்பு வந்தால் சரிதான் கண்டியளோ'

நாகப்பட்டினம் – காங்கேசன்துறை

## மார்ச் மாதத்திலிருந்து சரக்குக்கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 23
நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே சரக்குக் கப்பற்சேவையொன்று இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
'ஏ அன்ட் என் ☞ 11

## ஈழத்தமிழர்களுக்குத் தீர்வு உடனடியாகச் சாத்தியமல்ல

தமிழர்களுடன் மோடி நிற்பார்
பா.ஜ.க. அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23
ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை எவராலும் முன்வைக்க முடியாது. மாறாக இந்தப் பிரச்சினைக்கான தீர்வு என்பது ஒரு தொடர்ச்சியான முயற்சியாகும் என பாரதிய ஜனதா கட்சியின் தேசிய மகளிர் ☞ 11

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி முற்றவெளியில் நாளை ஆரம்பம்


யாழ்ப்பாணம், ஜன. 23
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி முற்றவெளியில் நாளை முதல் மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளது. பிளாஸ்ரிக் அற்ற வலயத்தை உறுதிப்படுத்தும் விதமாக இம்முறை கண்காட்சி முன்னெடுக்கப்படவுள்ளது.
பொருளாதார முன்னேற்றத்துக்கான வடக்கின் நுழைவாயில் என்ற தொனிப்பொருளுடன் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் ☞ 11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுக்கப்பல்களுக்கு அனுமதி புதிய நடைமுறைகள் விரைவில்



**கொழும்பு, ஜன.23**

**வெளிநாட்டு ஆய்வுக்கப்பல்களை நாட்டுக்கு அனுமதிப்பது தொடர்பான புதிய நடைமுறைகள் விரைவில் அறிவிக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிநாடுகளில் இருந்து வரும் ஆய்வுக்கப்பல்களை நாட்டுக்கு அனுமதிப்பது தொடர்பில் கடைப்பிடிக்கப்பட்டுவந்த நிலையான இயக்க நடைமுறையை மறுசீரமைத்து புதிய நடைமுறையை அறிவிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக எனது தலைமையில் விசேட குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சர்வதேச ஆய்வுக்கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையும்போது பின் பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் இக்குழு நிர்ணயாங் களை முன்வைக்கும். இக்குழுவின் பரிந்துரைக்கமையவே புதிய நிலையான இயக்க நடைமுறை பின்பற்றப்படும். அதற்கமையவே கப்பல்களை அனுமதிப்பது தொடர்பில் முடிவெடுக்கப்படும். - என்றார். (ச-44)

# தமிழ்த்தேசியக் கட்சிகளே மக்களாணைக்குக் கட்டுப்படுக

*யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் வலியுறுத்து*

யாழ்ப்பாணம்,ஜன.23

அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டத்தை முன்னகர்த்துவதற்கு தமிழ்த்தேசியக் கட்சிகள், ஐக்கிய முன்னணியொன்றை அமைத்துப் பணியாற்றவேண்டும் என யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் சி.சிவகஜன் தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சிக்காலத்தில் வரையப்பட்ட 'ஏக்கிய ராஜ்ஜிய' எனும் ஒற்றையாட்சி அரசியலமைப்பு வரைபினை தமிழ் மக்களின் பிரதிநிதிகளை ஏற்றுக்கொள்ளச் செய்வதனூடாக முன்னெடுப்பதற்கான முனைப்புகள் இடம்பெற்ற வண்ணமுள்ளன.

இந்தச் சூழ்நிலையில் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியொன்றை அமைத்து தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டமாக தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டத்தையே தமிழ்த் தேசிய அரசியற்கட்சிகள் முன்வைக்கவேண்டும். அத்துடன் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் ஏக்கிய ராஜ்ஜிய வரைபுகளை முற்றாக எதிர்ப்பதற்கு முன்வர வேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் மக்களாணையை மீறிய கடந்த கால செயல்களின் விளைவே அவர்களின் நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களுக்கு ஏற்பட்ட ஆசனங்களின் குறைவுக்குக் காரணமாகும். தமிழ்த்தேசியத்தை தேர்தல் அரசியலுக்கு அப்பால் மக்களை அரசியற்படுத்தி, அணிதிரட்டி மக்கள் அரசியலை முன்னெடுக்க தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் தவறிவிட்டன - என்றார். (ச-33,27)

# அறிவிப்புக்கு காத்திருக்காது வீட்டிலிருந்து வெளியேறலாம்

*மஹிந்தவை சீண்டும் நளிந்த*

கொழும்பு, ஜன.23

எழுத்துமூல அறிவிப்புக்காக காத்திருக்கவேண்டியதில்லை, அரச வதிவிடத்திலிருந்து மஹிந்த ராஜபக்ச வெளியேறலாம் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

எழுத்துமூலம் அறிவிப்பு விடுத்தால் அரசமாளிகையிலிருந்து வெளியேறத் தயார் என மஹிந்த ராஜபக்ச வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அறிவிப்பு விடுக்கும்வரை காத்திருக்கவேண்டியதில்லை. வெளியேறலாம். தேவையேற்படின் வாடகைப் பணத்தை செலுத்தி இருக்கலாம். மஹிந்தவுக்கு மூன்று மகன்மார் இருப்பதால் தந்தையைப் பராமரிப்பதில் சிக்கல் இருக்காது எனக் கருதுகின்றோம் - என்றார். (எ-44)

# மஹிந்தவுக்கு வீடு வழங்க நாட்டு மக்கள் தயாராம்!

*சாமர சம்பத் கூறுகின்றார்*

கொழும்பு, ஜன.23

மஹிந்த ராஜபக்ச அரசமாளிகையிலிருந்து வெளியேறினால் அவருக்கு 10 வீடுகளைக்கூட வாங்கிக் கொடுப்பதற்கு மக்கள் தயாராக உள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 'தூய இலங்கை' தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மஹிந்த ராஜபக்ச தங்கியுள்ள வீட்டை எடுக்கட்டும். அதை 44 லட்சம் ரூபாவுக்கு வாடகைக்கு வழங்க முடியாது. அவ்வாறு வழங்குவதாக இருந்தால் கொண்டை கட்டி சீனர்களுக்குத்தான் அதனை வழங்கமுடியும். விஜேராமப் பகுதியில் 44 லட்சத்துக்கு எவரும் வீட்டை வாடகைக்கு எடுக்கமாட்டார்கள்.

மஹிந்தவின் வீட்டை எடுத்தால் அவருக்கு 10 வீடுகளை வாங்கிக்கொடுப்பதற்கு மக்கள் இருக்கின்றனர். பாதுகாப்பு நீக்கப்பட்டால் தியாகத்தின் அடிப்படையில் மஹிந்தவுக்கு பாதுகாப்பு வழங்கவும் மக்கள் வருவார்கள். மஹிந்தவுக்கு 80 வயதாகிவிட்டது. எனவே, ஜனாதிபதி அநுர, மஹிந்தவுடன் மோதுவதைவிடுத்து, அவரின் மகன் நாமலுடன் மோதுங்கள் - என்றார். (எ-44)



# யாழ். ஜனாதிபதி மாளிகையை தொழில்நுட்பப் பல்கலையாக்குக

*ஜனாதிபதியிடம் யோசனை முன்வைப்பு*

யாழ்ப்பாணம் , ஜன. 23

யாழ்ப்பாணத்திலுள்ள ஜனாதிபதி மாளிகையை தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக மாற்றுமாறு முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி தெரிவித்ததாவது:

நான் ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் எனக்கு அரச செலவில் வீடு தேவையில்லை. பாதுகாப்பும் வேண்டாம். கொழும்பு மற்றும் கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகைகள் மாத்திரம் பராமரிக்கப்படும். நுவரெலியா, யாழ்ப்பாணம், உடவலை உட்பட ஏனைய பகுதிகளில் உள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் அமைச்சர்களுக்குரிய வீடுகள் தற்போது மதிப்பிடப்பட்டுவருகின்றன. அவ்வாறு சொத்து பெறுமதியை மதிப்பிட்ட பிறகு, பொருளாதாரத்துக்கு பயனளிக்கும் வகையில் அவை பயன்படுத்தப்படும். அதற்குரிய வழிமுறைகள்பற்றி ஆராய்ந்து யோசனைகளை முன்வைப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-44)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 22.01.2025 | புதன்கிழமை | O | 5 0 9 3 9 0 | 0432 |

## Super Ball DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 22.01.2025 | புதன்கிழமை | 2698 | X | 10 14 23 74 |

## சனிதா DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 22.01.2025 | புதன்கிழமை | F | 14 26 42 46 | 4859 |

## லக்ன ராசி

| திகதி | தினம் | மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 22.01.2025 | புதன்கிழமை | | 06 27 41 58 | 4410 |

## KAPRUKA DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 22.01.2025 | புதன்கிழமை | H | 07 | 28 30 50 66 | 1874 |

## அத கோடிபதி DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 22.01.2025 | புதன்கிழமை | I | 21 55 64 70 | 2524 |


## JAYODA DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 22.01.2025 | புதன்கிழமை | F | 04 06 17 64 | 2097 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சிடப்பட்ட மின்பட்டியலை பாவனையாளருக்கு வழங்குக

## பொதுச்சேவை ஆணைக்குழு அறிவுறுத்து



கொழும்பு , ஜன. 23

**அடுத்தகட்ட மின்கட்டண மீளாய்வின் பின்னர் அச்சிடப்பட்ட மின்பட்டியல்கள் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனப் பொதுச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

கிராமப்புறங்களிலுள்ள மக்கள் மற்றும் கைபேசி இல்லாதோரின் மின்இணைப்புகள் துண்டிக் கப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை மின் பாவனையாளர் சங்கம் பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அதையடுத்தே பொதுச்சேவை ஆணைக்குழு அடுத்த கட்ட மின் கட்டண மீளாய்வின் பின் அச்சிடப்பட்ட மின் பட்டியல்கள் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

பாவனையாளர்கள் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அவர்களுக்கு இலத்திரனியல் பட்டியலை வழங்கலாம் எனவும் பொதுச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை மின்பட்டியல் அச்சிடுவதற்கு 350 மில்லியன் செலவாகின்றது எனக் கூறப்படும் நிலையில் அந்தக் கட்டணம் பாவனையாளர்களின் தலையில் சுமத்தப்படக்கூடாது என மின் பாவனையாளர் சங்கத் தலைவர் தம்மிக சுட்டிக்காட்டியுள்ளார். (ச-22,6)

# பயிரழிவு இழப்பீடுகள் எமக்கு இல்லையா?

## வடக்கு விவசாயிகள் கேள்வி

யாழ்ப்பாணம், ஜன.23

கடந்த 2024 பெய்த பருவமழைவீழ்ச்சியின் நிமித்தம் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிரழிவு தொடர்பில் அரசாங்கம் அறிவித்த காப்புறுதித் தொகை அல்லது நட்டஈடு வழங்கப்படவேண்டும். அவ்வாறில்லையெனில் பிரதேச, மாவட்ட விவசாயக்கூட்டங்கள் நடத்துவதில் பயனில்லை என்று சங்கானைப் பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சங்கானைப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச விவசாயக் குழுக்கூட்டத்திலேயே அவர்கள் இதனைக் குறிப்பிட்டனர். விவசாயிகளாகிய நாம் பல்வேறு வாழ்வாதாரப் பிரச்சினைகளை ஒவ்வொரு வருடமும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

தென்னிலங்கையில் விவசாயிகளுக்கு குறுகிய அழிவுகள் ஏற்படுகின்றபோதே காப்புறுதி வழங்கப்படுகின்றபோதும் எம்மை மத்திய அரசாங்கம் புறக்கணிக்கின்றது.

எனவே விவசாயிகளான எமக்கு நட்டஈடு வழங்கப்படவேண்டும். இல்லையேல் இத்தகைய கூட்டங்களை நடத்தாதீர்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-125)



# கள் குடித்தவர் திடீர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம் இளவாலை தெற்கில் தவறணையொன்றில் கள்ளு அருந்தியவர் திடீரென சரிந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. சங்குவேலி தெற்கு, மானிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம்தங்கவேலு (வயது-64) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்புக் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப்பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (ச- 25,27)

### சட்டவிரோத சொத்துச் சேர்ப்பு

# சட்டவரைவைச் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஜன.23

தவறான வழியில் சேர்த்த சொத்துகள் தொடர்பான சட்டவரைவை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. தேசிய ஒருமைப்பாடு,நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார சமர்ப்பித்த நகல் சட்ட வரைவாளருக்கு அனுப்பப்பட்டு சட்டமா அதிபரின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த சட்டவரைவு நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் கிடைத்ததும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-22,6)

# உலக அழகிப்போட்டிக்கு இலங்கையிலிருந்து இருவர்

அமெரிக்கா, ஜன. 23

இம்மாதம் அமெரிக்காவின் லாஸ்வெகாஸில் நடைபெறவுள்ள திருமணமான பெண்களுக்கான உலக அழகிப்போட்டியில் இலங்கையிலிருந்து இருவர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நியூசிலாந்தில் பிரபஞ்ச அழகிப் பட்டம் பெற்ற இலங்கையைச் சேர்ந்த நிஷி ரணதுங்க மற்றும் கொழும்பில் கடந்த மாதம் நடைபெற்ற திருமணமான இலங்கை அழகிப் போட்டியில் தெரிவான இஷாதி அமந்தா ஆகியோரே 40 ஆவது திருமணமான பெண்களுக்கான உலக அழகிப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25, 6)




திண்ணையில கிடந்தவனுக்கு திடுக்கெண்டு கலியாணம் நடந்தமாதிரி ஆருக்கும் அறிவிக்காமல் உந்த யாழ்ப்பாணக் கலாசார மண்டபத்துக்கு வள்ளுவரின்ர பேரை மாத்திப்போட்டினம். இப்பிடி பேர் மாத்திறதை முதலே சொன்னால் எதிர்ப்பு வருமெண்டு அந்த மண்டபத்தைக் கட்டிக்குடுத்தவைக்கு வடிவாத் தெரியும். அதாலதான் அந்த நிகழ்ச்சிக்கு ஆக்களைக் கூப்பிடேக்ககூட, என்ன நிகழ்ச்சி, எதுக்கு வைக்கிறம் எண்டு ஒண்டுமே சொல்லாமல் 'கொழும்பில இருந்து தூதர் வாறார். நீங்களும் வாங்கோ' எண்டு மொட்டையாச் சொல்லித்தான் கூப்பிட்டவையாம். அதால விசயம் தெரியாமல் போன கனபேர், எங்கட கடற்றொழில் அமைச்சர் மாதிரி டிஜிட்டல் பெயர்ப்பலகையைத் திறந்துவைக்கேக்கதான் 'எட பேர் மாத்திற விழா' எண்டு கண்டு பிடிச்சவை.

எண்டாலும் சிலருக்கு இந்த விசயம் முதலே தெரியும். அதில ஒராள் புத்தசாசன கலாசார அமைச்சர். ஏனெண்டால், என்ன ஏதெண்டே தெரியாமல் அவர் நிகழ்வுக்கு வந்திருந்தால் மேலோட்டமா எங்களுக்கும் இந்தியாவுக்கும் இருக்கிற உறவு, இந்தியா செய்த உதவி எண்டு பொத்தம்பொதுவாத்தான் கதைச்சிட்டுப் போயிருப்பார். ஆனால் புத்தசாசன அமைச்சர் அண்டைக்கு மேடையில பேசேக்குள்ள மூச்சுக்கு முந்நூறுதரம் திருவள்ளுவரைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார். அதைவிட 1961 ஆம் ஆண்டுதான் திருக்குறளை முதன்முதலா சிங்களத்தில மொழிபெயர்த்தவை எண்டுசொல்லி, அந்த முதலாவது மொழிபெயர்ப்புப் புத்தகத்தையும் கையோட எடுத்துக்கொண்டந்து எல்லாருக்கும் காட்டினவர். அவர் பேசின பிறகுதான் பேர் மாத்துற டிஜிட்டல் பெயர்ப்பலகையைத் திறந்துவைச்சவை. அப்ப முதலே அவருக்கும் பேர் மாத்திற விசயம் தெரியும். அவருக்குத் தெரியுமெண்டால் அரசாங்கத்துக்கும் தெரியும்தானே.

பகிடி என்னெண்டால் அரசாங்கத்துக்கும் பேர் மாத்திற விசயம் தெரியும், புத்தசாசன அமைச்சருக்கும் தெரியும். ஆனால் அதே அரசாங்கத்தில இருக்கிற, வடக்கு மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யிற தமிழ் அமைச்சருக்கு அதைப்பற்றி தெரியாமல் பாத்திருக்கினம் எண்டால் உதுக்குப் பின்னால ஏதோ சிக்கல் இருக்கெண்டுதானே அர்த்தம். மண்டபத்தைக் கட்டிக்குடுத்தவைதான் பிறத்தியாக்கள் , அதால அவை தமிழ் அமைச்சருக்குச் சொல்லாமல் விட்டிருக்கலாம். ஆனால் வடக்கை அபிவிருத்தி செய்யப்போறம், எங்களுக்கு இந்தமுறை யாழ்ப்பாணத்தில மூண்டு எம்.பி.மாரை தந்த மக்களை ஏமாத்தமாட்டம் எண்டு சொல்லுற திசைகாட்டி அரசாங்கமும், புத்தசாசன அமைச்சரும், தங்கட சொந்த தமிழ் அமைச்சருக்கே இதைப்பற்றி மூச்சுக்கூடக் காட்டாமல் ஏமாத்திப் போட்டினமே. தங்கட அமைச்சரிட்டையே இப்பிடி ஒளிப்பு மறைப்புச் செய்யிறவை சனத்திட்ட என்னென்னத்தை ஒளிக்கினமோ, ஆர் கண்டது?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். சிலருக்கு வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி நிலவும்.

**மிதுனம்:** இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல்ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். வெளியூர்ப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.

**துலாம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம்.

**விருச்சிகம்** : எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் குடும்பத்துடன் வெளியில் சென்று வருவீர்கள். எதிரிகள் பணிந்துபோவார்கள்.

**தனுசு:** அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்குசிறிய அளவில்ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும்.

**கும்பம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முக்கிய முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

# சட்டவிரோத கட்டுமானத்தால் கடற்றொழிலுக்கு இடையூறு

## கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுக்குமா? சுழிபுரம் மீனவர்கள் கேள்வி

**யாழ்ப்பாணம், ஜன.23**

**சுழிபுரம் புளியந்துறை முதல் திருவடிநிலை கடற்கரைப் பகுதி வரை அமைக்கப்பட்டுவரும் சட்டவிரோத கட்டுமான நடவடிக்கைகளால் கடற்றொழிலாளர்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். இதுகுறித்து கரையோர பாதுகாப்புத் திணைக்களம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுழிபுரம் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

சங்கானை பிரதேச விவசாய குழு கூட்டம் பிரதேச செயலர் கவிதா உதயகுமார் தலைமையில் நேற்று இடம்பெற்றபோதே அவர்கள் இந்த விடயத்தை சுட்டிக்காட்டினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்

வேறு பிரதேசத்தவர்களால் கடற்கரையோரக் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு சட்டரீதியற்ற முறையில் எல்லைகள் இடப்பட்டு தனியார் சுற்றுலாத்துறை சார் நிலையமொன்று அமைக்கப்படுகின்றது. காலம்காலமாக இந்தப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கை இந்தச் செயற்பாட்டால் பாதிக்கப்படுகின்றது - என்றனர்.

இதுகுறித்து பிரதேச செயலாளர் தெரிவிக்கையில், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் இது தொடர்பாக உடனடியாகக் கவனம் செலுத்தி மீனவர்களினுடைய இயல்புநிலையைப் பேண வேண்டும்- என்றார். (ச-125)

# 'மண்' கவிதை நூல் சனியன்று வெளியீடு

கிளிநொச்சி, ஜன.23

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் அமரசிங்கம் கேதீஸ்வரன் எழுதிய 'மண்' கவிதை நூல் வெளியீடு கிளிநொச்சி மாவட்ட திறன்விருத்தி மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் ச. பூலோகராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு. முரளிதரன் பங்கேற்கவுள்ளார்.

நூலின் வெளியீட்டுரையை கிளிநொச்சி காவேரி கலாமன்ற இயக்குநர் வணபிதா யோசுவா அடிகள் நிகழ்த்துவார். நூலின் முதற் பிரதியை எந்திரி சுதாகரன் பெற்றுக்கொள்வார். (ச-25,9)

# 'த - நெயில்' இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம் , ஜன. 23

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் குடிசார் மற்றும் சுற்றாடல் சங்கத்தின் முயற்சியால் உருவான "the nail an engineer's digest" (ஆணி) இதழ் வெளியீடு இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. பலதரப்பினரது விமர்சனங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைய பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களையும் உள்ளடக்கி 3 ஆவது இதழ் வெளியிடப்படவுள்ளது. குறிப்பாக கணித எண் தொடர்பான கட்டுரைகள், புதிதாக பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் மாணவர்களுக்கான ஆலோசனைகள் ஆகியனவும் இந்த இதழில் அடங்கியுள்ளதாக ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் பிரதம அதிதியாகவும், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-20 ,27)



# இலவச பற்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம் , ஜன. 23

யாழ்ப்பாணத்தில் இலவச பற்சிகிச்சை முகாம் நேற்று புதன்கிழமை காங்கேசன்துறை நடேஸ்வர கல்லூரியில் நடைபெற்றது.

இலங்கைக் கடற்படையின் சேவா வனிதா பிரிவு மற்றும் கடற்படை பல் சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் முழுமையான பங்களிப்புடனும், 'குட் நெய்பர்ஸ் பவுண்டேசனின்' ஒத்துழைப்புடன் இந்த முகாம் நடைபெற்றது.

குறித்த பற்சிகிச்சை முகாமில் பங்கேற்றோர் பற்கள் பரிசோதனை, மருத்துவ ஆலோசனைகள் மற்றும் ஆரம்பச் சிகிச்சைகள் என்பவற்றைப் பெற்றுக் கொண்டனர். (ச-20,26)



யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நடத்திய ஒளிவிழா நிகழ்வின் போது, சங்கத்தலைவர் மு.ஜெ. சுஜிந்திரன் தலைமையில் சங்கக் கிளை நிலையங்களில் கூடிய வியாபாரம் மேற்கொண்ட பணியாளர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ச- 25, 17 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

அனைத்து பெரிய சாதனைகளுக்கும் நேரம் தேவைப்படுகின்றது.

– மாயா ஏஞ்சலோ –


# கிழிக்கப்படும் முகத்திரை!

இராணுவ முகாம்களுக்குள் இருந்த ஆபத்தான ஆயுதங்கள் சில பாதாளக்குழுக்களிடம் சென்றுள்ளன என்ற விடயத்தைப் பகிரங்கப்படுத்தியுள்ளார் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க. அத்துடன், பல இராணுவத்தினர் பாதாளக்குழுக்களின் முகவர்களாகச் செயற்படுகின்றனர் என்றும் அவர் பட்டவர்த்தனமாகக் கூறியுள்ளார். இலங்கையில் இதற்கு முன்னர் அதிகாரத்தில் இருந்த அனைத்துத் தரப்பினரும், இராணுவத்தைக் குளிர்விக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டே வந்திருந்தனர். இராணுவத்தினர் மீது சுமத்தப்படும் சாதாரண குற்றச்சாட்டு களைக் கூட விசாரிக்கும் மனோநிலையில் அவர்கள் இருந்ததில்லை. இராணுவத்தைப் பகைத்தால், அது சிங்கள பேரினவாதத்தைப் பகைப்பதற்குச் சமம். சிங்கள பேரினவாதத்தைப் பகைத்தால், அது வாக்குவங்கிகளை இழப்பதற்குச் சமம். ஆதலால், எந்த நடந்தாலும் ஒருவித சகிப்பு மனோநிலையில் இருப்பதற்கு பழகியிருக்கின்றன சிங்களத் தலைமைகள்.

இவ்வாறான கலாசாரம், மரபாகப் பரிணமித்துள்ள ஒரு நாட்டில், இராணுவத்தினரின் பாரதூரமான குற்றங்களுக்கு எதிராகக் கருத்துச் சொல்வதற்கும் ஓர் அசாத்தியத் துணிவு இருக்க வேண்டும். அந்தத் துணிவும், முதுகெலும்புத்தனமும் தனக்கு உள்ளது என்பதைத்தான் அநுரவின் அறிவிப்புக்கள் மெய்பிதம் செய்கின்றன. அத்துடன், பொதுமக்களின் பாதுகாப்புக்காகத்தான் இராணுவமே அன்றி, இராணுவத்துக்காகப் பொதுமக்கள் அல்லர் என்ற பொதுப் புரிதலையும் ஜனாதிபதி அநுர மறைமுகமாகக் கட்டியம் செய்திருக்கின்றார். இதற்காக அவரை எத்தனை பாராட்டினாலும் அது தகும். தூய இலங்கைத் திட்டம் எனப்படுவது துப்புரவாக்கும் நடவடிக்கைகள் மட்டுமல்ல, ஆக்கபூர்வமான முறைமை மாற்றத்தை எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டுமோ, அந்தப் புள்ளியை ஜனாதிபதி அநுர பற்றிப் பிடித்திருக்கின்றார். இந்தப் புள்ளியில் இருந்து எந்தளவு தூரத்துக்கு அவர் மறுசீரமைப்புக்களை மேற்கொள்கின்றாரோ, அவ்வளவு நேராகவும் சீராகவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வாழும் வளரும்.

போரின் பின்னர் வடக்கில் அமைக்கப்பட்டுள்ள படை முகாம்கள் தாராளம். போர்க் காலத்தின்போதும், விடுதலைப் புலிகளின் காலத்திலும் வடக்கில் கஞ்சா, ஹெரோய்ன், கொக்கெய்ன் போன்ற போதைப் பொருள்கள் இருந்ததேயில்லை. அதுதொடர்பில் அறிந்திருந்தவர்களைக்கூட விரல்விட்டு எண்ணக்கூடிய நிலையே இருந்தது. ஆதலால், படையினரின் சலுகைகள், திரைமறை நடவடிக்கைகள் இல்லாமல் வடக்கு மாகாணத்துக்குள் போதைப்பொருள்கள் ஊடுருவ வாய்ப்பில்லை என்பதே தமிழர்களின் பொதுவான குற்றச்சாட்டு. வடக்கு மாகாணத்தில் நடைபெற்ற பல்வேறு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் இது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. இதன் உண்மைத்தன்மை எவ்வளவுதூரம் சரியானது என்பதை தற்போது ஜனாதிபதி அநுரவே தன்வாயால் வெளிப்படுத்தியுள்ளார். ஆதலால் இதன் தொடர்ச்சியான நடவடிக்கைகளை அவர் வடக்கு - கிழக்கில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். அதேநேரம், இதில் இராணுவத்தினருக்கு மட்டும் தொடர்பு என்றில்லை. இராணுவத்தினரை முகவர்களாக வைத்து இயக்கியிருக்கக்கூடிய நாசகாரசக்திகளின் கரங்களும் திரைமறைவில் இருப்பதற்குச் சாத்தியங்கள் உண்டு. ஆதலால், அந்த முதலைகளின் முகத்திரைகளையும் அநுர அரசு கிழித்தெறிய வேண்டும். அதுவே இப்போது இலங்கையர்களின் எதிர்பார்ப்பு.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## கருத்துச் சுதந்திரத்துடன் நிகழ்நிலைக் காப்புச்சட்டம்

### எரங்க வீரரத்ன தெரிவிப்பு!



கொழும்பு, ஜன. 23

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தில் பொதுமக்களின் கருத்துகளைக் கேட்டறிந்த பின்னர் புதிய திருத்தங்களை மேற்கொண்டே நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளோம் என டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை முறைகேடுகளைத் தடுப்பதில் சட்டத்தின் பலனைப் பேணுவதுடன், சட்டத்தின் பாதகமான விளைவுகளைக் குறைக்க தேவையான மாற்றங்களைச் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கருத்துச்சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தப்படக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

அதன்படி தேவையான திருத்தங்களைச் செய்த பிறகு சட்டம் செயற்படுத்தப்படும். தற்போதைய வடிவத்தில் நாங்கள் அதைச் செயல்படுத்தமாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-22,6)

## குற்றச்செயல்களில் படையினர் கைது!

கொழும்பு, ஜன. 23

அண்மையில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் பாதுகாப்பு தரப்பை சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

கைது செய்யபடுள்ளவர்களில் இராணுவ மேஜர் ஒருவர், ஏனைய தரங்களில் உள்ள 6 அதிகாரிகள், ஒரு பொலிஸ் அதிகாரி மற்றும் ஒரு சிவில் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் உள்ளடங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டார். (ச-22,6)

## தேங்காய் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு

கொழும்பு, ஜன. 23

வடக்கு தென்னை முக்கோண வலயத்தில் 40ஆயிரம் ஹெக்ரேயர் தென்னஞ் பயிர்செய்கைக்காக 2025 வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் 1,437 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாட்டில் 5 ஹெக்ரேயருக்கும் குறைவான தென்னை தோட்டங்களுக்கு இலவச உரம் வழங்கவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## யாழ்.மாவட்ட செயலகத்தின் மின்சாரப் பாவனைக்கு ரூ. 16 இலட்சம் செலவு

யாழ்ப்பாணம், ஜன.23

கடந்த 2024 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்ட செயலகத்தின் மின்சாரப் பாவனைக்கு சுமார் 16 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் ஆர் . சிவரூபன் தெரிவித்துள்ளார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவலுக்கமைவாக அவர் இந்தத் தகவலை வழங்கியுள்ளார். கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கே இந்த மின்பாவனைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகம் குறிப்பிட்டுள்ளது. (ச-125)

நாளை

வெள்ளிக்கிழமை - தை - 06

24.01.2025

சுபநேரம் : 06.36 - 08.06

ராகுகாலம் : 11.06 - 12.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

பொன்னாலையில் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார் என வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். விசேட ரோந்து நடவடிக்கையின்போதே 53 வயதான குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 920 மில்லிகிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

# மரண அறிவித்தல்



**செல்வி புஸ்பராணி பொன்னுத்துரை (ராதா)**

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் உப்புமடம் சந்தி கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி புஸ்பராணி பொன்னுத்துரை அவர்கள் நேற்று (22.01.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை-சிவபாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் சந்திரகாந்தி, சகுந்தலாதேவி,ஜெகதீஸ்வரி, ஜெயலக்சுமி, வரதன், ரவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரஜனி, ரமணி, டயானி, றஜீவ், அகிலா, நிசாந்தன், நிஜாந்தினி ஆகியோரின் அன்புச் சித்தியும் ஜெயராஜா, உருத்திரராஜா, காசிநாதன், சபாநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2025) வெள்ளிக்கிழமை கோண்டாவில் மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ'

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 12 . 02 . 1952 — விண்ணில் 24 . 12 . 2024



**அமரர் திருமதி முத்துக்கிருஷ்ணன் வரதலட்சுமி**

**திதி: அபரபக்க நவமி**

காலனின் கட்டளையில் அமைதியாய்
போனதம்மா ஒரு சிரித்தமுகம்
அன்னை மொழியே அழகின் உருவமே
அன்பின் வடிவே எங்கள் தாயே
காலன் கவர்ந்து சென்று மாதம் ஒன்று கடந்ததுவோ?
ஈரம் காயாத விழிகள் இன்னும் தேடுதம்மா
நீங்கள் அருகில் வேண்டும் என்ற ஆறாத ஆசையோடு
மீண்டும் எம்மோடு கூடி மகிழ மாட்டீரோ...
ஏங்கி அழுகின்றோம்... அம்மா...

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

துயரத்தில் துணாகி அருகிருந்து ஆறுதல் தந்து அகத்தாலும் புறத்தாலும் உதவிய அத்தனை பேருக்கும் உள்ளம் நிறைந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

இன்று (23.01.2025) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீனாட்சி அம்மன் கோவிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(CR 44158) A-1

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 21 • 09 • 1947 — மறைவு 25 • 12 • 2024



கடந்த 25.12.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் நடராசா நாகராசா

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியை நாளை (24.01.2025) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

88/40, பத்திரகாளி கோவில் வீதி,
வண்ணார்பண்ணை.

குடும்பத்தினர்
077 2208337

(CS/57275) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 04 . 1968 — மறைவு 20 . 12 . 2024



**நல்லையா சத்தியானந்தன் (செல்வன்)**

**(உரிமையாளர்- மதுசன் தொலைத்தொடர்பகம் புளியங்கூடல் சந்தி)**

யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், ஊர்காவற்றுறை,புளியங்கூடலை வதிவிடமாகவும் , தற்போது பிரான்ஸ் இல் வசித்துவந்தவருமான திரு. நல்லையா சத்தியானந்தன் (செல்வன்) கடந்த 20.12.2024 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்

அன்னார் காலஞ்சென்ற நல்லையா - மற்றும் திலகவதியார் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகராசா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், விஜிதா அவர்களின் ஆருயிர்க் கணவரும், ஹரணி, சரணியா, மிதுனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பவானந்தன் (இந்தியா), காலஞ்சென்றவர்களான தேவானந்தன், தயானந்தன், மற்றும் சந்திரவதனா, சற்குணானந்தன் (கனடா), காலஞ்சென்ற கேதாரவதனா, மற்றும் மதிவதனா, சதானந்தன் (கனடா), காலஞ்சென்ற புஷ்பானந்தன், மற்றும் தவவதனா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற தமிழரசி , மற்றும் காந்தரூபி, லோஜா (கனடா), இளஞ்செழியன், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் ஜெயகாந்தன், ரசிதா (கனடா), வதனரூபன், குகேந்திரன், இரவீந்திரன், வனஜா, சுரேந்திரன், கிரிஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் , சுதாராஜேஸ்வரி, அன்ரன் மிராண்டா , முகுந்தன் , நிரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 9.00 - 9.30 மணிவரை 86 quai de la Rapée 75012 Paris என்னும் இடத்தில் நடைபெற்று மலரஞ்சலி நிகழ்வு முற்பகல் 10.30 - நண்பகல் 12.00 மணிவரை நடைபெறும். பூதவுடல் பிற்பகல் 12.15 - 01.15 மணிவரை Funerarium Joncherolles, 95 rue marcel sembat - 93430 Villetaneuse இல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் .உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| தொடர்புகளுக்கு : | விஜிதா - மனைவி | :+33766219528 |
| | திலகவதியார்- தாய் | :+94778466867 |
| | சுரேஷ் - மைத்துனர் | : +33 7 81 43 48 29 |
| | சற்குணானந்தன் - சகோதரன் | : +1 (604) 441-9361 |
| | சதானந்தன். - சகோதரன் | : +1 (573) 703-1666 |

தகவல் :
குடும்பத்தினர்

(CS/2352) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணிமுறிப்பு, ஆண்டான்குளம் மக்களை மீள்குடியேற்றுங்கள்!

வலியுறுத்துகின்றார் ரவிகரன் எம்.பி.


**முல்லைத்தீவு, ஜன.23**

**ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தண்ணிமுறிப்பு, ஆண்டான்குள மக்களை மீள்குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.**

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலேயே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் ஆகிய கிராமங்களின் மக்கள் இதுவரைமீள்குடியமர்த்தப்படவில்லை. 1984ஆம் ஆண்டு அந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்தனர். இதுவரை அவர்கள் மீள்குடியமர்த்தப்படவில்லை. அந்தப் பகுதி மக்கள் தங்கள் சொந்த இடங்களில் மீள்குடியமரத் தயாராக உள்ளனர். தங்களை மீள்குடியமர்த்த வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை முன் வைத்துள்ளனர். தங்கள் மீள்குடியமர்வைத் தடுத்து, அந்தப் பகுதிகளில் வேறு குடியேற்றங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்படுகின்றதா என்ற அச்சத்துடனேயே அந்த மக்கள் உள்ளனர். அந்த மக்களை அவர்களின் சொந்த இடத்தில் மீள்குடியமர்த்த புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (எ-26,246)




## ‘திரிகல்’ திரையில்

யாழ்ப்பாணம், ஜன. 23

கடந்த வருடம் காலமான திரைப்பட இயக்குநர் அமரர் ஷியாம் பெனகலுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக அவரின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட ‘திரிகல்’ (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்) எனும் திரைப்படம், யாழ். தந்தை செல்வா கலையரங்கில் நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திரையிடப்படவுள்ளது. கோவாவில் வசிக்கும் போர்த்துக்கேய வம்சாவளியினரின் வாழ்க்கைப் பின்னணியில் அமைந்த இத்திரைப்படம் தேசியவிருது வென்ற படமாகும். (ச-25)

## செல்வம் எம்.பி.யின் கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்க உத்தரவு!

வவுனியா, ஜன.23

வழக்குத் தவணையொன்றில் சமுகமளிக்காமையால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் நேற்றுமுன்தினம் நீதிமன்றம் சென்றிருந்தேன். எனது கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும், நீதிமன்ற அனுமதிபெற்று வெளிநாடு செல்லமுடியும் என்றும் அநுராதபுரம் மேல் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மஹிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் முள்ளியவாய்க்காலில நடந்த அனர்த்தங்களையும், இராணுவம் செய்த கொடூரமான செயற்பாடுகளையும் பொதுவெளியில் பேசியமைக்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகளுடன் இணைந்து இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகச் சதி செய்தேன் என்ற அடிப்படையில் என்னை கைதுசெய்தார்கள்.

இந்த வழக்குகள் வவுனியாவிலும், அநுராதபுரத்திலும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. கடந்த 16 ஆம் திகதி வழக்குத் தவணைக்குச் சமுகமளிக்காமையால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலையாகியபோது, 25 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதித்த மேல் நீதிமன்றம், கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்கவேண்டும் என்று உத்தரவிட்டது. என்னுடன் மரியசீலன் என்பவரும் வழக்குக்குத் தொடர்ச்சியாக சமுகமளிக்கின்றார். இவர் 8 ஆண்டுகள் சிறையில் இருந்தவர். இந்த வழக்கு 15 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது - என்றார். (எ-110)

## துணைவேந்தர்கள் இல்லாமல் இயங்கும் பல்கலைக்கழகங்கள்

யாழ்ப்பாணம், ஜன.23

நாட்டில் நான்கு பல்கலைக்கழகங்கள் துணைவேந்தர் இன்றிப் பதில் துணைவேந்தர்களுடன் இயங்குகின்றன.

அரச பல்கலைக் கழகங்களுக்குத் துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக இதுவரைகாலமும் பின்பற்றப்பட்ட நடைமுறையை மாற்றுவது தொடர்பில் அரச உயர்மட்டத்தில் ஆராயப்பட்டுவருவதாலேயே துணைவேந்தர் நியமனங்களில் இழுபறி நிலைமை காணப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.

ராஜரட்ட பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ருஹுணு பல்கலைக்கழகம் ஆகியவை ஏற்கனவே பதில் துணைவேந்தர்களுடன் இயங்குகின்றன தற்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராகக் கலாநிதி தம்பிராஜா பிரபாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்ட தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதனின் பதவிக்காலமும் நிறைவடைந்துள்ள நிலையில் யாழ்.பல்கலைக்கழக வேந்தர் நியமனம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தால் எந்தவொரு தகவலும் வெளியிடப்படவில்லை. (எ-26)

## குரங்குகள் தொல்லை

யாழ்ப்பாணம்.ஜன.23

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கூரை ஓடுகளுக்கு மேலாக குரங்குகள் நாலாப்பக்கமும் சிதறி ஓடியதால் கூரை ஓடுகள் சேதமடைந்துள்ளன.

அதேவேளை இந்தப் பகுதியில் அதிகரித்துக் காணப்படும் குரங்குகளின் சேட்டைகளால் தென்னை மரங்களில் தேங்காய்களும் பாதிக்கப்படுவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-33-17)

## தமிழர்மரபு திங்கள் விழா லண்டனில் கோலாகலம்!

லண்டன்,ஜன. 23

தமிழர்கள் வாழ்வில் பண்பாட்டு நிகழ்வான தமிழர் மரபு திங்கள் விழா லண்டனில் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ் தகவல் நடுவம் மற்றும் சமூக அபிவிருத்திக்கான மையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், பிரித்தானியாவின் நியூ மோல்டன் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த நிகழ்வு கொண்டாடப்பட்டது.

பறை முழங்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க மயிலாட்டம், குதிரையாட்டம், புலியாட்டம், கரகாட்டம் எனத் தமிழர்களின் கண்கவர் கலைகளுடன் விருந்தினர்கள் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு பல்வேறு பாரம்பரிய கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. (ச-25, 27)


‘க்ளின் ஸ்ரீலங்கா’ செயற்றிட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கு தாளையடி பிராந்தியத்தின் கடற்கரை பிரதேசங்களை சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் நேற்றுப்புதன் கிழமை மேற்கொள்ளப்பட்டன. இலங்கை இராணுவத்தின் 52 ஆவது பிரிவு படையணியுடன் இணைந்து பருத்தித்துறை பிரதேசசபையினர், வடமராட்சி கிழக்கு பிரதேசசெயலகத்தினர், மருதங்கேணி பிராந்திய பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் எனப் பலர் சிரமதான நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ச-25,27)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள அபாயத்தில் மன்னார் கிராமங்கள்



மன்னார், ஜன. 23

மன்னார் மாவட்டத்தில் அருவியாற்றை அண்டிய பல கிராமங்களில் வெள்ளஅபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் அங்குள்ள குடும்பங்களை இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்குத் தயாராகுமாறு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழைபெய்து வருவதனால் பெரிய குளங்களின் வான்கதவுகள் திறக்கப் பட்டுள்ளன.

இதனால் மல்வத்து ஓயா எனப்படும் அருவியாற்றை அண்டிய பகுதிகளான நானாட்டான் மற்றும் மடுப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல கிராமங்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப் பட்டுள்ளது.

தற்போது அருவியாற்றில் 13.2 அடி நீர்வரத்து காணப்படுகின்றது. நீர்வரத்து மேலும் அதிகமானால் மக்கள் கட்டாயம் இடம்பெயர வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுவர்\ என்றும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை அருவியாற்றில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் தொழிலும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-213-56)

## இளைஞர் ஒருவர் மீது கொடூரமான தாக்குதல்

### 20 பேரைக் கொண்ட குழு அடாவடி; இருவர் கைது: 18 பேர் தலைமறைவு

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் குழுவொன்றால் அவரின் குடும்பத்தினர் முன்னிலையில் நிர்வாணமாக்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளார். இந்த விவகாரத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் 18 பேர் தலைமறைவாகியுள்ளனர்.

இரு குடும்பங்களுக்கு இடையிலான பிரச்சினையே இந்தத் தாக்குதல்களுக்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. இளைஞர் மீது தாக்குதல் நடத்தும் போதும் சித்திரவதை செய்யும்போதும் தாக்குதல்தாரிகள் அதை வீடியோவாகவும் பதிவுசெய்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் சந்தேகநபர்களாக இருவரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் ஏனைய நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26-20)

கைதடி

## கிணற்றில் மீட்கப்பட்ட சிசு உயிரிழந்தே பிறந்தது

### உடற்கூற்றுப் பரிசோதனையின் தகவல்

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி தென்கிழக்கு மூர்த்தியாவத்தை கந்தசாமி கோவில் பகுதியில் உள்ள தோட்டக்கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட பச்சிளம் சிசு, உயிரிழந்தே பிறந்துள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனையின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தோட்டத்தில் வேலை செய்வதற்காகச் சென்றவர்கள் வழங்கிய தகவலுக்கு அமைய சிசுவின் சடலம் மீட்கப்பட்டிருந்தது. உடற்கூற்றுப் பரிசோதனை நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே சிசு உயிரிழந்து பிறந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் சிசுவைப் பிரசவித்த தாயார் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

## மாணவிக்குப் பாலியல் தொல்லை ஆசிரியர் நேற்றுக் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலையொன்றில் கல்விகற்கும் மாணவிக்குப் பாலியல் துன்புறுத்தலும், தொல்லையும் வழங்கிய குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

8ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவிக்குப் பாலியல் துன்புறுத்தலை வழங்கிய 52 வயதுடைய ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26)

மணமகள் தேவை
செய்வாய் தோஷம் உள்ள கிறிஸ்தவ மணமகனுக்கு செய்வாய் தோஷம் உள்ள கிறிஸ்தவ மணமகள் தேவை.
தொடர்பு: சுசீலா (CS 2356) P-1
077 911 6346 (தரகர்)

துயர் பகிர்கின்றோம்
எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. செ.அனிஸ்ரன்
அவர்களின் பாசமிகு தாயார்
செல்வரத்தினம் இராஜேஸ்வரி
அவர்கள் கடந்த 16.01.2025 வியாழக்கிழமை காலமானார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் வட்டம்
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
(CS/57291) J-1

துயர் பகிர்கின்றோம்
எமது கல்லூரியின் உதவி அதிபர் திரு. S.றொமேஸ்
அவர்களின் அன்பு மாமனார்
சந்தியாப்பிள்ளை மரியதாஸ்
அவர்கள் கடந்த 18.01.2025 சனிக்கிழமை காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் வட்டம்
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
(CS/57290) J-1

வேலைவாய்ப்பு
எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
- இயந்திர இயக்குநர் (Machine Maintainer)
- உதவியாளர் (Helper)
- பழகவிரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்

ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன்
இன்று / நாளை / நாளை மறுதினம்
(23,24,25.01.2025)
காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை
நேரில் சமூகமளிக்கவும்.
உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
JITF
யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சி 2025
HERO ZIPPER
Manufacturers Pvt Ltd
எமது நிறுவனக் காட்சிக் கூடத்திற்கு வருகைதாருங்கள்.
நாளை 24, 25 மற்றும் 26 ஜனவரி 2025
முற்பகல் 10.00 - இரவு 8.00 மணிவரை
முற்றவெளி மைதானம் - யாழ் கோட்டைக்கு அருகில்
HRO
WWW.HEROZIP.COM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 12 . 1953



மறைவு
22 . 01 . 2025

**குணநாயகம் ஸ்ரீகுணரஞ்சி**

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குணநாயகம் ஸ்ரீகுணரஞ்சி அவர்கள் நேற்று (22.01.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணநாயகம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், ஸ்ரீஸ்கந்தராஜா, ஸ்ரீஆனந்தராஜன், ஸ்ரீகுணமதி, ஸ்ரீகுணரஜனி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் அமுதராணி, லக்ஷ்மி ஆகியோரின் மைத்துனியும், நிருஜா, நிரஞ்சன், அமுதராஜ், குணபவன், சஸ்ரூபி, சஸ்தீபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஜந்தி, ஜெயகாந்தன், சங்கீர்த்தா, சுரேசன், சுமிற்றா, தனுசூயா, விவேதிகா ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

"பகவதி வாசா"
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
075 782 3581

(CS/57294) J-1


# மீண்டெழுவோம் என்பதாலேயே அதிகளவான அடக்குமுறை

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

அடுத்த தேர்தல்களில் பொதுஜன பெரமுன மீண்டெழும் என்பதால்தான், அதிகளவான அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றன என்று நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அச்சுறுத்தல் மற்றும் மிரட்டல்கள் மூலம் எமது அரசியல் பயணத்தை தடுக்க முடியாது. அடுத்த தேர்தலில் பெரமுன மீண்டெழும் என்பதாலேயே அரசியல் ரீதியில் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

அச்சுறுத்தல்மூலம் அரசியலை முன்னெடுப்பதற்கு தேசிய மக்கள் சக்தியினர் முயற்சிக்கின்றனர். அதனால்தான் மேடையமைத்து மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. என்னை சிறையில் அடைப்பதன்மூலம் நாட்டுப் பிரச்சினைகள் தீருமாயின் சிறையில் அடைத்தாலும் பரவாயில்லை.

எவரேனும் தவறிழைத்திருந்தால் தண்டனை வழங்குவது பிரச்சினை இல்லை. ஆனால் அரசியல் ரீதியில் ஒடுக்கி, அச்சுறுத்தி, திணறவேண்டாம் என மிரட்டி, பாதுகாப்பு குறைக்கப்படும் எனக் கூறி அரசியல் நடத்த முற்படுவது வங்குரோத்து அரசியலாகும். பொதுஜன பெரமுன கட்சி அடுத்த தேர்தலில் பலமான சக்தியாக மாறும் என்பது ஆளுங்கட்சியினருக்கு தெரியும். அதனால்தான் நாம் இலக்கு வைக்கப்பட்டுள்ளோம் - என்றார். (ம-44)

## உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து

# வெளியேறும் எண்ணம் இலங்கைக்கு இல்லை

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 23

உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து இலங்கை வெளியேறாது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, உலக சுகாதார அமைப்பிலிருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளமை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்ததாவது:

உலக சுகாதார அமைப்பில் இருந்து விலகுவதற்கு நாம் தீர்மானிக்கவில்லை. அமெரிக்கா சுயாதீன நாடு. முடிவுகளை எடுக்கும் உரிமை அந்த நாட்டுக்கு உள்ளது. எனினும், உலக சுகாதார அமைப்பில் இருந்து எந்தவொரு நாடும் வெளியேறுவதை நாம் விரும்பவில்லை. மாறாக மேலும் பல நாடுகள் இணைந்து குறித்த அமைப்பு வலுவடைய வேண்டும். என்பதே எமது விருப்பம். மாறாக நாடுகள் வெளியேறினால் உலக சுகாதார அமைப்பு பலவீனமடையும் என்றார். (ம-44)

# பொலிஸாரின் தவறால் தப்பித்தார் அர்ச்சுனா

கொழும்பு, ஜன. 23

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிரான அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், 'இராமநாதன் லோச்சன' என்று தவறுதாகப் பெயர் குறிப்பிடப்பட்டமையால் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

விஜபி விளக்குகளைப் பயன்படுத்தி போக்குவரத்துக்கு இடையூறாக இருந்ததற்காக இந்த வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் ஆவணங்கில் உள்ள பெயரும் பொலிஸாரின் ஆவணங்களில் உள்ள பெயரும் தவறாக இருந்தமையால் நீதிமன்றத்தால் அர்ச்சுனா விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் பெயரை சரியாகப் பயன்படுத்தத் தெரியாமல் இருந்த பொலிஸார் மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ம-இ)


# பருத்தித்துறையில் 14 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 23

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட கண்காணிப்பின் போது திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஆறு பேர் உள்ளிட்ட 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பருத்தித்துறை முல்லைத்தீவு வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் இரண்டு தனியார் பேருந்துகள் வழித்தட பயண அனுமதியின்றிச் செயற்பட்டமையும் கண்டறியப்பட்டுள்ளது. (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் தலைமையில் தைப்பொங்கல் நிகழ்வு யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கடந்தவாரம் இடம்பெற்றது. (எ-41,17)



மன்னார் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத்தின் தலைவர் சிவகரன் தலைமையில் பொங்கல்விழா மன்னார் அம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. (எ-41-213-56)

காங்கேசன்துறை, தையிட்டி கணையவிற் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (எ-25.27)



# அரசியல்கைதிகளை விடுவிக்காவிடின் வடக்கு - கிழக்கை முடக்குவோம்

## சிவாஜிலிங்கம் வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஜன.23

தமிழ் அரசியல்கைதிகளை விடுதலை செய்யாவிடில் வடக்கு - கிழக்கை முடக்கிப் போராட்டம் வெடிக்கும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டுவரும் கையெழுத்துப்போராட்டம் கடந்த சனிக்கிழமை நெல்லியடியில் இடம்பெற்றது.

இதில் பங்கேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல்கைதிகள் விவகாரத்தில், தொடர்ந்து ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாமல் காணப்படுகின்றன. மஹிந்த ராஜபக்ச காலம் தொடக்கம் இன்றுவரை அது நீண்டு கொண்டே இருக்கின்றது.

ஆயுதப் புரட்சியை நடத்தியவர்கள் இன்று ஆட்சிப்பீடத்தில் இருக்கின்ற போது, தமிழ் இளைஞர்கள் மாத்திரம் பயங்கரவாதிகளாக்கப்பட்டுள்ளனர்.

பிரதி நீதியமைச்சரின் 'அரசியல் கைதிகள் இல்லை' என்ற கருத்து மிகவும் மோசமானது. அரசாங்கம் தமிழ் அரசியல்கைதிகளை விடுவிப்பதற்குத் தயங்குகிறது. சிங்கள மக்கள் கொந்தளிப்பார்கள் என அஞ்சுகின்றது. எதிர்வரும் சித்திரைப் பொங்கலிலாவது அவர்கள் விடுவிக்கப்படவேண்டும்.

இல்லாவிட்டால் , வடக்கு - கிழக்கை ஸ்தம்பிக்கவைக்கக்கூடிய ஒரு அறவழிப்போராட்டத்தை முன்னெடுப்போம்- என்றார். (ச-100)



ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அறநெறிப் பாடசாலையின் பொங்கல் விழா முன்பள்ளி முன்றலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்பள்ளித்தலைவர் இராதா தலைமையில் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (எ-25)

# சதொசவில் இனி சீனி 240 ரூபா!

வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுக்கமைய சதொச விற்பனை நிலையங்களில் பல்வேறு பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

நிலக்கடலை கிலோ ஒன்றின் விலை 100ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 995 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிவப்பு சீனியின் விலை 40 ரூபாவால் குறைக்கப்பட்டுள் எது. அதன் புதிய விலை 300 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கின் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 180 ரூபாவாக நிர்ணயிக் கப்பட்டுள்ளது. சிவப்பு கௌபியின் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 765 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நெத்தலியின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 940 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாஸ்மதி அரிசியின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 645 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பெரிய வெங்காயத்தின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 230 ரூபாவாக நிர்ணயிக் கப்பட்டுள்ளது. பருப்பின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 288 ரூபாவாக நிர்ணயிக் கப்பட்டுள்ளது. வெள்ளை சீனியின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 240 ரூபாவாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. (ம)



யாழ். பிரதேச செயலகத்தில் 'கிளீன் சிறிலங்கா' நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ஆர்.ஆர்.சோபிகா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ-25-69)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதச்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும் இதே கருத்தை முன்வைத்திருந்தார். இதையடுத்தே பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்படுகின்றது. அது தயாரிக்கப்பட்டதும் குழுவில் ஆராய்ந்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்பதுடன் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் கொண்டுவரப்படும் - என்றார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, 'ஏனைய கட்சிகளைக் காட்டிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் நாங்கள்தான் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டோம். ஆகவே இதன் கொடுமை எமக்கு நன்கு தெரியும். பயங்கரவாதத் தடைச்சட்டம் வெகு விரைவில் நீக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இந்தச் சட்டத்தை ரத்து செய்வது தொடர்பிலும், மாற்றீடான சட்டத்தை உருவாக்குவது தொடர்பிலும் ஆராய்வதற்கு அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது' என்று தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## மார்ச்...

லாஜிஸ்டிக்ஸ்;' என்ற நிறுவனத்தால் இந்தச் சரக்குக் கப்பற்சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. 'தாரா கிரண்' என்ற 700 தொன் இடையுள்ள கப்பலே இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

இந்தக் கப்பற்சேவைக்கான பூர்வாங்கப் பணிகள் அனைத்தும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பெப்ரவரி மாதம் மூன்றாவது வாரத்தில் பணிகள் அனைத்தும் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மார்ச் மாதம் முதலாவது வாரத்தில் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் பயணிகள் சேவையொன்றை ஆரம்பிப்பது தொடர்பிலும் மேற்குறித்த நிறுவனம் கவனம் செலுத்தியுள்ளது. அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## அரசியற்....

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதி அமைச்சர், 'நாட்டில் அரசியற்கைதிகள் இல்லை' எனக் கூறியுள்ளார். அவரின் இந்தக் கருத்துத் தொடர்பில் கவலையடைகின்றேன். 'மைத்திரி - ரணில்' ஆட்சியிலும் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அதற்கு நான் கடும் எதிர்ப்பை அமைச்சரவையிலும், நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் வெளிப்படுத்தினேன். அதைத் தொடர்ந்து அரசியற்கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

ஜே.வி.பி. என்பது ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட கட்சியாகும். எனவே பிரச்சினைகளும், அரசியற்கைதிகள் தொடர்பிலும் அவர்களுக்குப் போதிய அளவுக்குத் தெரியும். இதைப் பட்டுணர்ந்த தரப்பினரே நாட்டில் அரசியற்கைதிகள் என எவரும் இல்லை என்று இன்று கூறுகின்றனர். அதுதான் கவலையான விடயமாகும்.

அரசியற்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கலாம், தடுப்புக் காவல் வழங்கப்பட்டிருந்தால் அதை மீளப்பெறலாம், அரசியற்கைதிகளை விடுவிப்பதற்குப் பல வழிகள் உள்ளன. விடுவிக்கவேண்டும் என்று சிந்தித்தால் விடுவிக்கமுடியும் - என்றார். (அ-ம-44)

## நாகர்கோவில்...

அவதானித்த வீட்டின் உரிமையாளரின் முயற்சியின் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். இது தொடர்பில் மருதங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். தீவிபத்துக்கான காரணங்கள் தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லை. (அ-ம-27)

## ஈழத்....

அணித் தலைவியும், தமிழக சட்டமன்ற உறுப்பினருமான வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய ஈழத்தமிழர் உறவானது இயற்கையாகவே உணர்வுரீதியாக, வரலாற்றுரீதியாக, கலாசார ரீதியாகப் பிணைந்திருக்கின்றது. சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவிவரும் ஈழத்தமிழர் பிரச்சினையானது பல்வேறு பரிமாணங்கள், பல்வேறு வடிவங்களில் மாற்றமடைந்து வருகின்றது. இத்தகைய சூழலில் இந்தியாவை ஆட்சி செய்யும் கட்சியின் பிரதிநிதியாகவும், சட்டமன்ற உறுப்பினர் என்ற ரீதியிலும் இந்த நீண்டகாலப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு சாத்தியமில்லை என்று கூறுகின்றேன். 2014ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை அரசின் உயரதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார். அத்துடன், யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள தமிழர்களுடன் தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடினார். இது 'யாழ்ப்பாண மக்களுடன் நிற்கிறேன்' என்ற செய்தியைப் பறைசாற்றும் நடவடிக்கையே - என்றார். (அ-ம-இ)

## சர்வதேச...

கண்காட்சி 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 15ஆவது ஆண்டாக இந்த வருடமும் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 45 ஆயிரம் தொடக்கம் 60 ஆயிரம் வரையிலான பார்வையாளர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படும் நிலையில், 350க்கும் மேற்பட்ட காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விவசாயம், தொழில்நுட்பம், விருந்தோம்பல், கல்வி, உணவு, நவநாகரிகம் மற்றும் இதர தொழிற்துறைகள் என பல்வேறுபட்ட உற்பத்தியாளர்களின் பொருள்கள் மற்றும் சேவைகள் இம்முறை காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. இம்முறை கூடுதலான நிலப்பரப்பில் கூடுதலான காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறுவர்களை மகிழ்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் முதல் பல்வேறுபட்ட புதிய ஏற்பாடுகள் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (அ-ம-26-20-126-27)

## 8 இந்திய...

அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட எட்டு மீனவர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைதீவுக்கு அண்மித்த கடற்பகுதியில் வைத்து கடந்த 12ஆம் திகதி அவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவர்கள் அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று வழக்கு மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

இதன்போது இந்திய மீனவர்கள் எட்டுப் பேருக்கும் ஆறு மில்லியன் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் அனைவருக்கும் எட்டு மாதங்கள் சிறைத்தண்டனை விதித்த நீதிமன்று அந்தத் தண்டனையை பத்து வருடங்களுக்கு ஒத்தி வைத்துள்ளது. இதனால், எதிர்வரும் பத்து வருடங்களுக்குள் மீண்டும் அத்துமீறும் பட்சத்தில் இந்தத் தண்டனையையும் சேர்த்து அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-113)

## கனமழையால்...

தெரிவித்துள்ளது. வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை காரணமாக வவுனியாவில் தொடர்ச்சியாக கனமழை பெய்துவருகின்றது. இதனால் பல பகுதிகள் வெள்ளக்காடாகக் காட்சிதருகின்றன. இதுவரை 20 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாவற்குளம், இராசேந்திரங்குளம், ஈரப்பெரியகுளம், முகத்தான்குளம், மருதமடுக்குளம் மற்றும் கல்மடு அணைக்கட்டு என்பன நீர்வரத்து அதிகரித்தமையால் தொடர்ந்தும் வான் பாய்ந்துவருகின்றன. இதனால், வெள்ளப்பேரிடர் நிலை மேலும் அதிகரிக்கும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா அரச அலுவலகங்களுக்குள்ளும் வெள்ளநீர் புகுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## புதிய...

மையை நீக்குவதில் பிரச்சினை எதுவும் இல்லை. ஜனாதிபதிப் பதவி எம்மிடம் இருப்பதால், எதிரணிகள் அதற்கு இணக்கம் தெரிவிப்பார்கள். ஆனால், தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பிலேயே சர்ச்சை உள்ளது.

தற்போதைய தேர்தல் முறைமையின்கீழ் (விகிதாசார விருப்புவாக்கு முறை) எமக்கு பெரும்பான்மை பலம் கிடைக்கப்பெற்றிருந்தாலும், சாதாரண நிலைமையின்கீழ் பலவீனமான நாடாளுமன்றமே அமையப்பெறும். 1994, 2004 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் எந்தவொரு கட்சிக்கும் 113 ஆசனங்கள் கிடைக்கப்பெறவில்லை.

விசேட சந்தர்ப்பங்களின்போதே 113 ஆசனங்கள் கிடைத்தன. 2010, 2019 மற்றும் 2024 தேர்தல்களின்போது பெரும்பான்மை கிடைத்தது. எனவே, பலவீனமான நாடாளுமன்றம் அமையும்பட்சத்தில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஊடாகவே உறுதித்தன்மை ஏற்படுத்தப்படும்.

தேர்தல் முறைமை மாற்றத்தில்தான் பிரச்சினை உள்ளது. தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் பல சுற்று பேச்சுகள் இடம்பெற்றுள்ளன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதில் பிரச்சினையில்லை. தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பிலேயே இணக்கத்தை எட்ட எதிர்பார்க்கின்றோம். இது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறும் - என்றார். (அ-ம-44)

## அர்ச்சுனா...

அமையவே யாழ்ப்பாணம் பொலிஸாரால் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வேட்பாளர்கள் என்ற ரீதியில் குருசாமி சுரேந்திரன், சசிகலா ரவிராஜ், அருள்பரன் உமாகரன், சிவப்பிரகாசம் மயூரன், தம்பியையா கிருஷ்ணானந்த், இராமநாதன் அர்ச்சுனா, கௌசல்யா நரேந்திரன் ஆகிய வேட்பாளர்களுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கட்சிகள் என்ற ரீதியில் தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் சுயேச்சைக்குழு 17 ஆகியவற்றுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சசிகலா ரவிராஜுக்கு எதிராக ஏற்கனவே வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## 35 வேட்பாளர்கள்...

பாணப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் தகவல்களுக்கு அமையவே இந்த விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-26)

## இலங்கையில்...

இலங்கையில் சமத்துவம், உண்மை மற்றும் நீதிக்கான முயற்சிகளை ஆதரிப்பது குறித்து பிரிட்டன் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்று பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

லண்டனில் நடைபெற்ற பொங்கல் பண்டிகையை தமிழர்களுடன் இணைந்து கொண்டாடிய பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரிட்டனுக்கு தமிழ்ச்சமூகம் வழங்கும் ஆதரவு மிகப்பெரியது. எனவே, அவர்கள் எம்முடன் இரண்டறக் கலந்தவர்கள். ஆனால், தமிழர்களின் பலரின் வரலாறு துயரமும் வேதனையும் நிறைந்தது என்பது எனக்குத் தெரியும். ஆதலால், பிரிட்டனை நீங்கள் (தமிழர்கள்) உங்களின் இல்லமாக எண்ணவேண்டும்.

பொங்கற் பானையைப் போலவே தமிழ் சமூகத்தின் செழுமையும் பெருந்தன்மையும் நிரம்பிவழிகின்றன. நாடு முழுவதும் ஒளியையும் நம்பிக்கையையும் கொண்டு வருகின்றது. இலங்கையில் சமத்துவம் உண்மை மற்றும் நீதிக்கான முயற்சிகளை ஆதரிப்பது குறித்து பிரிட்டன் அக்கறையுடன் உள்ளது. அதை மீள வலியுறுத்துகின்றேன் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L- வரலாறு

M. [illegible]ர் B.A (Hons) History, P.G.D.E, M.E.D, M.A (Hons) History

**கற்பிக்கும் இடங்கள்**

- D.M.I, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
- BITSMANS மானிப்பாய்
- உயர்கலைக் கல்லூரி கொக்குவில், குளப்பிட்டி.
- Online Zoom Class

A/L- 2K25, 2K26 பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
A/L 2K25 வகுப்பிற்கு நேரடியாக சமுகமளிக்க முடியாத வெளிமாவட்ட மாணவர்களுக்கு மட்டும் Zoom வகுப்பு நடைபெறும்.

**தொடர்பு: 077 482 5587**

(CS 23354) P-1

# வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க் கப்படுகின்றன.

- **எழுதுநர்**
- **கிராபிக் டிசைனர்**

ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன் **எதர்வரும் (25.01.2025) சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை நேரில் சமுகமளிக்கவும்.**

**உதயன்**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# கடை வாடகைக்கு

யாழ். நகருக்கு அருகாமையில் (O.L.R. Church அருகில்) கடை (10' x 67') வாடகைக்கு உண்டு.

**077 757 0400**

(CS/57293) J-1

## மானிப்பாயில் காணி விற்பனைக்கு

உடுவில் வீதி, மானிப்பாயில் (நான்காம் ஒழுங்கை) மூன்று பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நல்ல சூழல், குடியிருப்புக் காணி பரப்பு-முப்பது லட்சம் (பேசித் தீர்மானிக்கலாம்). தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு:**

**077 482 5587, 076 704 3743**

# முன்னாள் அமைச்சர் அநுர பிரயதர்சன கைது



கொழும்பு, ஜன. 23

2014ஆம் ஆண்டு வெள்ள நிவாரண உதவியில் 6.1 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின்பேரில், முன்னாள் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவரும் நிலையில், விசாரணைகளின் பின்னர் இதர தகவல்கள் வெளிப்படுத்தப்படும் என்று பொலிஸார் கூறியுள்ளனர். (ம-26)

## சிறுநீரகம் தேவை

**B+** குருதி வகையை சேர்ந்த ஒருவருக்க
**B+ or O+** குருதிவகையை சேர்ந்த சிறுநீரகம் தேவை.
35 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. HIA Test Report இருந்தால் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**077 479 4826, 077 116 5375**

(CS/57014) J-1


## வேலையாட்கள் தேவை

மின்பொருள் விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.
21 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் விரும்பத்தக்கது.
யாழ் மாவட்டத்திற்கு உட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**075 590 4041**

(CS/57297) J-1

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.12.2024 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் கறுப்பையா கனகரட்ணம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (24.01.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தோற்றம்:** 05.01.1954
**மறைவு :** 25.12.2024

**பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்**

**குடும்பத்தினர்: 077 877 5529**

# வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி **Hotel** ஆன **Tilko Jaffna City Hotel** ற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.


**பாதுகாப்பு உத்தியோகத்தர் - Security Guard (Day & Night)**

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தங்களது சுய விபரக் கோவையை உடனடியாக நேரில் அல்லது கீழ்காணும் முகவரிக்கு / மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு: **021 720 0707 / 076 149 8961 / 077 470 5759**
**info@tilkohotels.com**
**Tilko Jaffna City Hotel - 70/6, K.K.S.Road, Jaffna.**

# மரண அறிவித்தல்



## இராசரத்தினம் பாலசுப்பிரமணியம்

**(ஓய்வுபெற்ற அலுவலக உதவியாளர், பூநகரி கல்விக் கோட்டம், பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் கணக்காளரும், பல்லவராயன் கட்டு ஸ்ரீ நாகபூசனி அம்மன் ஆலயத்தின் முன்னாள் தலைவரும், செல்லியாதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தின் முன்னாள் பொருளாளரும் தற்போதய உறுப்பினரும், கொல்லைகுறிச்சி கமக்கார அமைப்பின் முன்னாள் செயலாளரும்)**

அன்னார் செட்டியகுறிச்சி பூநகரியை பிறப்பிடமாகவும் தற்போது ஆனந்தபுரம் கிளிநொச்சியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (22.01.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், நாகலிங்கம் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மராணியின் பாசமிகு கணவரும், வசந்தன் (செய்தியாளர் சக்தி T.V), வனஜா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - மாகாண சுதேச மருத்துவ திணைக்களம், வட மாகாணம்), பார்த்தீபன் (ஆசிரியர், மன்னார்/ புதுவெளி அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலை), சர்மிலன் (கணிய அளவையியலாளர் QS), துர்க்கா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச வைத்தியசாலை பூநகரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சஜீபா (அளவெட்டி), நிரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளூராட்சி அமைச்சு - வட மாகாணம்), மகிந்துஷா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு - வடமாகாணம்), சுரேசன் (ஞானம் வேளாண் பல்பொருள் வாணிபத்தின் உரிமையாளர் - முட்கொம்பன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இராஜேஸ்வரி, அன்னலட்சுமி, காலஞ்சென்ற கனகாம்பிகை, காலஞ்சென்ற சிவபாக்கியம், ரஞ்சிதமலர், கோணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜனுசிகா, லோஜினன் ஆகியோரின் பாசமிகு பேரனும், கமலேஸ்வரி, காலஞ்சென்ற கேதீஸ்வரன், கலாநிதி, உதயகுமாரன், புஸ்பநிதி, பத்மநிதி, தயாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லமான ஆனந்தபுரத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செட்டியகுறிச்சி பூநகரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.589, ஆனந்தபுரம், இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CR 44161) A-1

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**அனந்த இசைக்கல்லூரி மாணவன்**

**செல்வன் வி. சுவர்ணன் அவர்களின்**

## மிருதங்க அரங்கேற்றம்



- **இடம் :** குபேர மஹால் (சுதுமலை அம்மன் கோவில் அருகாமையில்)
- **காலம் :** இன்று (23.01.2025) வியாழக்கிழமை
- **நேரம் :** பி.ப.3.00 மணி

திரு.திருமதி விஜிந்தன் - கேசினி தம்பதியரின் புத்திரனும், கிருபா அனந்தகோபன் அவர்களின் மாணவனுமாகிய செல்வன் வி. சுவர்ணன் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாராட்டுவோர்:** சித்தப்பாமார், மாமா, அன்ராமார், அம்மம்மாமார், தம்பிமார், தங்கைமார்.

(cs.57295) (N-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.